**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**முன்னிலை:– திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசி மாதம் 29–ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை

**இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.280/2023**

**(CNR NO.TNTV14-001497-2023)**

முருகதாஸ் . . . . . . மனுதாரர்

எதிராக

மேலாண் இயக்குநர் ,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

கும்பகோணம். . . . . . . .எதிர்மனுதாரர்

இந்த மனுவானது கடந்த 07.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சக்தியமூர்த்தி, பி.காம்., பி.எல்., மற்றும் ஆர்.எஸ்.பரமசிவம், எம்.ஏ., எல்.எல்.பி., ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.உதயகுமார், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று (13.03.2026) வழங்கும்.....

## உத்தரவு

கடந்த 24.12.2022-ம் தேதி மதியம் சுமார் 1.40 மணியளவில் ஆலத்தம்பாடியில் உள்ள எஸ்பிஐ ஏடிஎம் அருகே நடந்த விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.25,00,000/- பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்க கோரி மோட்டார் வாகன சட்டப்பிரிவுகள் 140 மற்றும் 166-ன் கீழும் மற்றும் மோட்டார் விபத்து உரிமைகோரல் தீர்ப்பாயம் விதிகள் 3-ன் கீழும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்** :-

விபத்தில் காயம்பட்ட மனுதாரரான முருகதாஸ் என்பவர் 28 வயதுடையவர் என்றும், விபத்து சமயத்தில் மனுதாரர் தஞ்சாவூரில் ரெடிமேட் காம்பவுண்டு வேலை செய்தும், கொத்தனார் வேலை செய்தும் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/- வருமானம் ஈட்டி வந்தார் என்றும், கடந்த 24.12.2022 ம் தேதி மதியம் 1.40 மணி அளவில் மனுதாரருக்கு சொந்தமான TN-50-AT-7919 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தில் ஆலத்தம்பாடி கடைத்தெரு SBI ATM அருகே இடதுபுறமாக மிதமான வேகத்தில் சென்றுகொண்டிருந்தார் என்றும், அப்பொழுது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-N-0301 என்ற எண்ணுள்ள அரசு பேருந்துவின் ஓட்டுனர் எதிர் திசையிலிருந்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி மனுதாரர் மீதும் மனுதாரர் பைக் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் மனுதாரருக்கு பல கொடுங்காயங்கள் ஏற்பட்டது என்றும், உடன் மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், அங்கு முதலுதவி சிகிச்சை

அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டும், அங்கு மனுதாரர் 4 நாட்கள் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றார் என்றும், அதனை தொடர்ந்து சிறப்பு சிகிச்சை தேவைப்பட்டதால் TMC மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றார் என்றும், அதனை தொடர்ந்து 2 மாத காலம் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றும், இவ்விபத்து தொடர்பாக ஆலிவலம் காவல் நிலையத்தில் ஓட்டுநர் மீது குற்ற எண்.151 /2022 –ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ii) மேற்படி வாகன விபத்தில் மனுதாரருக்கு 1) தலையில் மண்டை ஓடு உடைந்து 8x5x1.5cm அளவிற்கு கொடுங்காயம், 2) வலது தோள்பட்டையில் 4x4cm அளவிற்கு கொடுங்காயம்,3) தலையில் டெம்போரல் எலும்பு உடைந்து கொடுங்காயம், 4) ஹீமொரோஸ் எலும்பு முறிந்து கொடுங்காயம், 5) மேல் பூராவும் சிராய்ப்பு காயங்கள், 6) உடம்பு வலி, நெஞ்சு வலி.

iii) மேலும், மனுதாரரால் எந்தவித வேலையும் செய்ய முடியவில்லை என்றும், அதன் காரணமாக வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், விபத்து சமயத்தில் மனுதாரர் நல்ல திடகாத்திடத்துடன் இருந்தார் என்றும், வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், எனவே ரூ.25,00,000/– விபத்து நஷ்ட ஈடாக எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மேற்படி விபத்து எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும்

ஓட்டியதனால் ஏற்பட்டதாகும். ஆகவே, மேற்படி நஷ்டஈட்டுத் தொகையை எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டுள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலை நிற்கக்கூடியதல்ல என்றும், அவற்றை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், எதிர்மனுதாரர் ஓட்டுனர் மீது காவல்துறை தரப்பில் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை மட்டுமே அடிப்படையாக கொண்டு எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோருவது தவறு என்றும், விபத்து என்பதே திட்டமிடப்படாத, எதிர்பார்க்காத தருணத்தில் நிகழும் ஒரு செயல் என்றும், இது போன்று விபத்துகளில் விபத்தில் ஈடுப்பட்ட இரு வாகனங்களுக்கும் சில விகிதாசார அடிப்படையில் பொறுப்பு உள்ளது.

ii) மேலும், சாலைகளின் அகலம் இவ்வாறான விபத்துகளில் பெரும்பங்கு வகிக்கிறது. சுமார் 9 அடி அகலம் உள்ள பேருந்திற்கும் 4 அடிக்கும் குறைவான அகலம் கொண்ட இரு சக்கர வாகனத்திற்கும் சாலையை உபயோகப்படுத்தும் போது சரிபாதியாக பிரித்து பார்ப்பது சரியாகாது என்றும், மேலும் இருவாகனங்களின் இயக்கமும், கட்டுப்படுத்தும் விதமும், இருசக்கர வாகனத்தை விட பேருந்திற்கு தான் கடினம் நினைத்த வினாடியில் நிறுத்துவதும் கடினம் என்றும், விபத்து நடந்த இடத்தில் சாலையில் வாகனங்களின் இறுதிநிலை, விபத்து வரை படங்கள், விபத்தினால் வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதாரங்கள்

ஆகியவற்றிலிருந்து "RES IPSA LOQUITOR" முறையில் அணுகுவதே மிக சரியானதாகும்.

iii) தலைகவசம் அணியாமல் வாகனத்தை இயக்குவது தவறென்றும் சொல்லும் மோட்டார் வாகன சட்டத்தை மதிக்காமல் விபத்திற்கு பின்னர் அதே மோட்டார் வாகன சட்டத்தினை கேடயமாக பயன்படுத்தி நஷ்டஈடு பெறுவது என்பது வழக்கமாகி உள்ளது என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்து ஓட்டுனரால் மட்டுமே நடத்திருக்க வாய்ப்பில்லை என்றும், இவ்விபத்திற்கு மோட்டார் சைக்கிள் ஓட்டியும் பொறுப்பாவார் என்பதால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் MACTOP No: 160/2016 CMA No:2309 of 2018 and CMP No:17641 of 2015-12.12.2019 Oriental Insurance Company Ltd, V/S Thiruganasambandam என்ற வழக்கில் மனுதாரர் விபத்துக்குள்ளான இருசக்கர வாகனத்தில் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்க வேண்டும் என கூறி தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும், அந்த தீர்ப்பின் அடிப்படையில் இந்த வழக்கின் மனுதாரர்கள் விபத்துக்குள்ளான TN 50 AT 7219 என்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரான திருத்துறைப்பூண்டி தாலூக்கா, பழையங்குடி, கோவில் தெரு, 1/44 (9) 2 என்ற முகவரியை சேர்ந்த காத்தான் மகள் நாகராஜன் என்பவரை இவ்வழக்கில் ஒரு எதிர்மனுதாரராக சேர்த்து நடத்திட வேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்க வில்லை என்றால் NON JOINDER OF NECESSARY PARTIES என்ற தோசத்தால் இம்மனு பாதிக்கப்படும்.

iv) கடந்த 24.12.2022 அன்று இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிஎன்-68 என்-0301 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை அதன்

ஓட்டுனர் மதியம் சுமார் 01.05 மணிக்கு திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து நடைபெடுத்து சீரான வேகத்திலும், நிதானமாகவும், கவனமுடனும் சாலை விதிகளை கடைபிடித்தும் திருத்துறைப்பூண்டி நோக்கி சென்று கொண்டிருக்கும் போது விபத்து நடந்ததாக கூறப்படும் ஆலத்தம்பாடி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கி /ஏற்றிக்கொண்டு சுமார் 300 மீட்டர் தூரம் சென்றுகொண்டிருக்கும் போது எதிரே TN 50 AT 7219 என்ற பதிவெண்கொண்ட Yamaha Saluto RX இருசக்கர வாகனத்தில் இவ்விபத்தில் காயமுறற்தாக கூறப்படும் மனுதாரர் முருகதாஸ் த/பெ நாகராஜ் வயது 28 என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், அலட்சியமாகவும், தலைகவசம் அணியாமலும் மது அருந்திய நிலையில் போதையில் பிரதான சாலையில் மேற்படி இருசக்கர வாகனத்தை தாறுமாறாக இயக்கி கொண்டு வருவதை பார்த்த இந்த எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் மேற்படி பேருந்தை பிரேக் செய்து நிறுத்திவிட்டார் என்றும், மேலும் நிறுத்திய பேருந்தில் மேற்படி இருசக்கர வாகன ஓட்டி போதையில் நிலைதடுமாறி இந்த எதிர்மனுதாரர் பேருந்தில் பின் வலதுபுறம் மோதி கீழே விழுந்து தனக்கு தானே விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி இந்த விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டியே முழுப்பொறுப்பாவார் என்றும், மேற்படி இருசக்கர வாகன ஓட்டியானவர் பிரதான சாலையில் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றம் மற்றும் உயிருக்கு ஆபத்தானது என்பது தெரிந்தும் கூட அதனை கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் பிரதான சாலையில் மேற்படி வாகனத்தை தாறுமாறாக இயக்கி இந்த விபத்தினை தனக்கு தானே ஏற்படுத்திக்கொண்டுள்ளார்.

v) மேற்படி இருசக்கர வாகன ஓட்டி மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தை பிரதான சாலையில் தாறுமாறாக இயக்கியதால் தான் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டில் Nature of Injury Treatment பகுதியில் Sustained Head Injury Under the Influence of Alchol என்று தெள்ள தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இருசக்கர வாகன ஓட்டுனர் விபத்து ஏற்படுத்திய காலத்தில் வாகனம் ஓட்டுவதற்குரிய ஓட்டுனர் உரிமம் செல்லுபடியாகும் நிலையில் வைத்திருந்தார் என்பதனை நிரூபிக்க வேண்டும் என்றும், விபத்திற்குள்ளான TN 50 AT 7219 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் முறையாக காப்பீடு செய்து செல்லுபடியாகும் நாள் முதிர்வடையாமல் உள்ளது என்பதை நிரூபிக்க மனுதாரரே கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி இருசக்கர வாகனத்தை நெடுஞ்சாலையில் இயக்க தகுதியற்றவர் ஆகிறார் என்ற நிலையில் மனுதாரர் இழப்பீடு கோரவும் தகுதியற்றவர் ஆவார்.

vi) விபத்திற்குள்ளான TN 50 AT 7219 என்ற பதிவெண் கொண்ட என்ற இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை மற்றும் பதிவுச் சான்றிதழ் இவற்றை தாக்கல் செய்ய மனுதாரரே கடமைப்பட்டவராவார் என்றும், இவ்வழக்கின் அசல் மனுவின் பக்கம் எண்:2–ல் வரிசை எண்:4 மற்றும் 6–ல் குறிப்பிட்டுள்ளது போல்

கொத்தனராக வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/− வருமானம் பெற்றுவந்ததை நிரூபிக்கும் வகையில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மூலமாக வருமானத்தை நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மேற்படி வழக்கின் மனுதாரர் செய்யும் தொழிலான Ready Made Compount போடும் வேலை என்பது மாதம் 30 நாட்களும் கிடைக்க வாய்ப்பில்லை.

vii) மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு 24.12.2022 முதல் 27.12.2022 வரை திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இலவச மருத்துவ சிகிச்சை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் மருத்துவ சிகிச்சைக்காக ரூ.90,000/−செலவாகியுள்ளது என்பது உண்மைக்கு மாறான என்றும், மனுதாரர் மருத்துவமனையில் எந்த தேதி முதல் எந்த தேதி வரை சிகிச்சை மேற்கொண்டதற்கும் மருந்து வாங்கியதற்கும் விபத்து பதிவேடு மற்றும் மருந்துச் சீட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடமைப்பட்டவராவார்.

viii) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ இரசீதுகளில் மணுதாரர் பெயர் இல்லை என்றாலும் மற்றும் Advance தொகை செலுத்திய இரசீதுகளையும் நீக்கரவு செய்து சரியான இரசீதுகளை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும், மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கு முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ்

தொகை ஏதும் பெறவில்லை என்பதை நீதிமன்றத்தில் நிருபிக்க வேண்டும் என்றும், எனவே எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. <u>பிரச்சனை</u>:–**

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவர்களா, அவ்வாறெனில் மனுதாரருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**5.** மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் முருகதாஸ் என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.1**ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1**ஆக அருள் அரசு பேருந்து ஓட்டுநர் விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2** ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:–</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர்

முருகதாஸ் என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழிக்காட்டுதலின்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர் குற்றவியல் வழக்கை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of Probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானதாகும்.

8. ம.சா.1 தனது சாட்சியத்தில்

" நான் 24.12.2022 ம் தேதி மதியம் 1.40 மணி அளவில் எனக்கு சொந்தமான TN–50–AT–7919 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தில் ஆலத்தம்பாடி கடைத்தெரு SBI ATM அருகே இடதுபுறமாக மிதமான வேகத்தில் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–68–N–0301 என்ற எண்ணுள்ள அரசு பேருந்துவின் ஓட்டுனர் எதிர் திசையிலிருந்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி என் மீதும் என் பைக் மீதும் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார்." என சாட்சியம் அளித்துள்ளார்.

9. **ம.சா.ஆ.1**ஆன முதல் தகவல் அறிக்கையில்

" முருகதாஸ் அவருக்கு சொந்தமான TN–50–AT–7219 என்ற பதிவெண் கொண்ட YAMAHA SALUTO RX என்ற வாகணித்தில் திருத்துறைப்பூண்டி TO திருவாரூர் மெயின் ரோட்டில் உள்ள

ஆலத்தம்பாடி SBI ATM எதிரே மதியம் சுமார் 01.40 மணியளவில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுபுறமாக வந்துக்கொண்டிருந்த போது எதிர்திரையில் திருவாரூர் TO திருத்துறைப்பூண்டி மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்த TN-68-N-0301 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த கொத்தமங்கலம் பள்ளங்கோயில் கடியாச்சேரியை சேர்ந்த மருதமுத்து மகன் அருள் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் சாலையில இடதுபுறம் பேருந்தை ஓட்டாமல் மறுபுறம் ஏறிவந்து ஓட்டி எதிர்திசையில் எனது கணவர் வந்த இருசக்கர வாகனத்தின் பக்கவாட்டின் மீது உரசியதில் நிலைத்தடுமாறி கீழே விழுந்ததில் தலையில் இரத்தகாயம் ஏற்பட்டது. "

என கண்டு எழுதப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டது. ஆனால் மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1**ஆனவர் சாட்சியம் அளித்திருந்ததையும் இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலித்தது.

**எ.ம.சா.1** தன்னுடைய சாட்சியத்தில்

"கடந்த 24.12.2022 அன்று இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிஎன்-68 என் 0301 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை அதன் ஓட்டுனராகிய நான் மதியம் சுமார் 01.05 மணிக்கு திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து நடையெடுத்து சீரான வேகத்திலும், நிதானமாகவும், கவனமுடனும் சாலை விதிகளை கடைபிடித்தும்

திருத்துறைப்பூண்டி நோக்கி சென்று கொண்டிருக்கும் போது விபத்து நடந்ததாக கூறப்படும் ஆலத்தம்பாடி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கி / ஏற்றிக்கொண்டு சுமார் 300 மீட்டர் தூரம் சென்றுகொண்டிருக்கும் போது எதிரே TN 50 AT 7219 பதிவெண்கொண்ட Yamaha Saluto RX இருசக்கர வாகனத்தில் இவ்விபத்தின் மனுதாரர் முருகதாஸ் த/பெ நாகராஜ் வயது 28 என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், அலட்சியமாகவும், தலைகவசம் அணியாமலும் மது அருந்திய நிலையில் போதையில் பிரதான சாலையில் மேற்படி இருசக்கர வாகனத்தை தாறுமாறாக இயக்கி கொண்டு வருவதை பார்த்த இந்த எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனராகிய நான் மேற்படி பேருந்தை பிரேக் செய்து நிறுத்திவிட்டார். மேலும் நிறுத்திய பேருந்தில் மேற்படி இருசக்கர வாகன ஓட்டி போதையில் நிலைதடுமாறி இந்த எதிர்மனுதாரர் பேருந்தில் பின் வலதுபுறம் மோதி கீழே விழுந்து தனக்கு தானே விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்பதால் எதிர்மனுதாரான நான் பணிபுரிந்து வந்த அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் மண்டலம் எந்த வகையிலும் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்லர். மேற்படி இருசக்கர வாகன ஓட்டி மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தை பிரதான சாலையில் தாறுமாறாக இயக்கியதால் தான் அந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டில் Nature of Injury Treatment பகுதியில் Sustained Head Injury Under the Influence of Alchol

என்று தெள்ள தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. " என அளித்துள்ள சாட்சியத்தையும் இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலித்தது.

அது குறித்து நிரூபிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.2 ஆன விபத்து பதிவேடு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. எ.ம.சா.1 ஆனவர் மது போதையின் தாக்கத்தில் தான் மனுதாரர் விபத்தில் காயம் அடைந்ததாக கூறுகிறார் ஆனால் மனுதாரர் கற்றறிந்த வழக்கறிஞர் கீழ்கண்ட மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பை சுட்டிக்காட்டி வாதிட்டார்.

I) **IN TEH HIGH COURT OF JUDICATURE AT MADRAS**

**DATED : 16.04.2024**

**CORAM**

**THE HONOURABLE MR.JUSTICE.N.ANAND VENKATESH**

**CMA No.2494 of 2022**

Ramesh . . . . . Appellants

Vs.

1. Selvakumar
2. The Branch Manager,
United India Insurance Company limited
Rep. By its branch manager
No.50-A, Paalaivasal Street,
Perambalur.

Policy No.0905023116P100751679 . . . . Respondents

" Consuming alcohol per say is not an offense. In fact, the State is the only provider of the alcohol to the citizens through the IMFL shops run by them. In view of the same, it is the sole responsibility of the State to also take care of the consequences arising out of consumption of liquor. What is important is to see if the consumption of alcohol has influenced the driving capacity of the rider of the vehicle. Sec 185 of the Motor Vehicles Act, 1988, gives some indication with respect to the level of alcohol in the blood which will be considered to be an offense. **<u>It is provided that the alcohol in the blood cannot exceed 30 mg per 100 ml of blood.</u>** Only if the level crosses this threshold fixed under the provision, a criminal offense is said to have been committed. Therefore, it can be safely held that the same threshold can be applied even to make a legal presumption that a person will not be within control while riding the vehicle under the influence of alcohol. "

என மேற்கண்ட மாண்மை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பில் விபத்து சயமத்தில் ஒரு நபரின் இரத்தத்தில் 100 மிலி –க்கு 30 மிகி கிராம் அளவைவிட ஆல்கஹால் அதிகமாக இருந்தால் மட்டுமே விபத்திற்கான இழப்பீடு என்பது பெற இயலாது என மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 185 கூறுகிறது என வாதுரைக்கப்பட்டது. ஆனால் எ.ம.சா.ஆ.2 ஆன விபத்து பதிவேட்டை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கையில் முருகதாஸ் இரத்தத்தில் உள்ள ஆல்கஹால் அளவு எவ்வளவு வீதம் உள்ளது என மருத்துவர் குறிப்பிட்டு அந்த ஆவணத்தில் தெளிவாக குறிப்பிடவில்லை என்பதால் மிக குறைந்த அளவு இருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட விபத்தானது முருகதாஸ் என்பவர் மது அருந்தியிருப்பதாலும், மேற்படி விபத்திற்கு மனுதாரரும் பொறுப்பாவார் என்றும், இந்த விபத்தானது

மனுதாரரின் கவனகுறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்றும், ஆகையால் நஷ்ட ஈட்டு தொகை வழங்க கடமைப்பட்டவர் அல்ல என எதிர்மனுதாரர் தரப்பில் கூறும் வாதம் ஏற்புடையதல்ல என்றும், மேற்படி விபத்தை குறித்து மனுதாரரின் மனைவி தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது ம.சா.ஆ.1–ன் மூலம், ம.சா.ஆ.1–ன் படி எதிர்மனுதாரரின் ஓட்டுநரான அருள் என்பவர் தான் எதிரியாக காண்பித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் சாலையின் நடுபகுதியில் வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும்பொருட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியங்களையும், ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தாத நிலையில் மேற்கண்ட மாண்புமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பின்படி சட்டப்படி குறைந்த அளவு மட்டுமே மது அருந்தியுள்ளதால் அதனால் இந்த விபத்து ஏற்பட்டது என எதிர்மனுதாரர் தரப்பில் கூறும் வாதம் ஏற்புடையதல்ல என்றும், ஆகவே மனுதாரர் இழப்பீடு பெற தகுதியுடையவர் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கை மற்றும் நீ.ம.சா.ஆ.1ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டது என்பதால் மனுதாரருக்கு, எதிர்மனுதாரரான அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் மண்டலம் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**10. <u>பிரச்சனை எண்.2க்கு தீர்வு</u>:-**

இந்த மனுவில் மனுதாரர் முருகதாஸ் என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் மனுதாரருக்கு பல கொடுங்காயங்கள் ஏற்பட்டது என்றும், உடன் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டும், அங்கு மனுதாரர் 4 நாட்கள் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றார் என்றும், அதனை தொடர்ந்து சிறப்பு சிகிச்சை தேவைப்பட்டதால் TMC மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றார் என்றும், அதனை தொடர்ந்து 2 மாத காலம் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 10% ஊனம் ஏற்பட்டதாக கருத்து கூறி **நீ.ம.சா.ஆ.1**ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் N.Kannan Vs. P.Rajendran and another, C.M.A.No.1918 of 2025 Date of Disposal.25.07.2025 மற்றும் J.Chithirai sekar Vs. Purushothaman C.M.A.No.3544 of 2024, Date of disposal.09.01.2025** என்ற வழக்குகளில் வழங்கியுள்ள முன் தீர்ப்பு நெறிகளை மேற்கோள்காட்டி இவ்வழக்கில் விபத்தானது 2022-ல் நடந்துள்ளது என்பதால் 1 சதவீத

ஊனத்திற்கு ரூ.9,000/– வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதை பின்பற்றி அதன்படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.9000/– வீதம் கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 10% என்பதால் (10%x9000) அவர் 90,000/– இழப்பீடாக இந்த தலைப்பின் கீழ் பெற உரிமையுள்ளவர் ஆவார். மனுதாருக்கு வலி, வேதனை இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் அவருக்கு ரூ.15,000/–ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. விபத்து சமயத்தில் மனுதாரர் தஞ்சாவூரில் ரெடிமேட் காம்பவுண்டு வேலை செய்தும், கொத்தனார் வேலை செய்தும் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மெய்ப்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

1) **Managing director,TNSTC villupuram Vs. Seetha lakshmi** dated:03.04.2017, CMA No.1132/2017, the Hon'ble Madras High court has fixed the monthly income Rs.7000/- in the year 2012, for a non mazdoor staff of PWD, following the Judgement of the Hon'ble Supreme Court in syed sadiq and others Vs. DM UIIC LTD., [CD] 2014 (SC) 044] wherein, the Honorable Supreme Court fixed the monthly income of a vegetable vendor, at Rs.6500/- in the year 2008.

2) In **Andal and others Vs Avinav Kannan and New India Assurance Co Ltd,** reported in 2019 (1) TNMAC 54, The Hon'ble Madras High Court while fixing the income for a meat chopper who had died on 07.02.2014, has taken his income Rs.6500/- in the year 2007-2008 and multiplying it with the cost of inflation index

for the year 2013-2014 and then driving the result with the cost of inflation index for the year 2007-2008 (Rs.6500/-*220/129) has arrived at the income at Rs.11,085/- and has rounded off the same at Rs.11,000/- per month.

3) In **Kirti Vs Oriental Insurance Company**, the Hon'ble Supreme Court has approved the adopting of minimum wages prescribed by the Government for skilled workers, in a case where no evidence or documents were produced to show the income of the deceased.

4)In **CIVIL APPEAL NO.615OF 2021 [Arising out of S.L.P.(C) No.6466 of 2019] Chandra @ Chanda @ Chandraram & Anr. Versus Mukesh Kumar Yadav & Ors**, the Hon'ble Supreme Court has held that in the absence of salary certificate, the minimum wage notification can be a yardstick but at the same time cannot be an absolute one to fix the income of the deceased.

மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவுசெய்து ஒரு விவசாயியோ, தொழிலாளியாகவோ, வேறு இதர வேலை செய்பவராக இருந்தாலும் குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி ஒரு நாளைக்கு ஊதியமாக ரூ.400 எளிதாக சம்பாதித்திருப்பார் என்றும், நாள் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.12,000/- சம்பாதித்து இருப்பார் என்று இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.12,000/- வருமானம் ஈட்டியிருக்க கூடும் என்று முடிவு செய்து அவர் 3 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 12000x 3மாதம்) ரூ.36,000/-மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.10,000/-ம்,

உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/—ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.5,000/—ம், வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/—ம் வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

**12.** மனுதாரர் முருகதாஸ் என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| 10% நிரந்தர ஊனத்திற்கு (10%x9000) | ரூ.90,000/— |
| வலி வேதனைக்கு | ரூ.15,000/— |
| வருமான இழப்பீடுக்கு (12000x3) | ரூ.36,000/— |
| ஊட்டச்சத்து உணவு | ரூ.10,000/— |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/— |
| போக்குவரத்து செலவு | ரூ.5,000/— |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/— |
| மருத்துவ பில்கள் | ரூ.500/— |
| மொத்தம் | ரூ.1,71,500/— |

**13.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.1,71,500/— சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு

தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433–ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**14.** இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.1,71,500/–ஐ எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக மனு தாக்கல் நாள் (24.08.2023) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின்

NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மனுதாரரின் காயத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், விபத்தானது 2022–ல் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.715/– உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.6,430/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.27 19:06:26 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 1087 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 25 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 6430 | 00 |
| சம்மன்படி | 4 | 50 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 7657 | 00 |

(இம்மனுவின் செலவுத் தொகையான ரூ.7,657/—ஐ எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:—**

ம.சா.1 முருகதாஸ் (மனுதாரர்)

2. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:—**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 25.12.2022 | முதல் தகவல் அறிக்கை — நகல் |
| ம.சா.ஆ.2 | 27.12.2022 | மருத்துவமனை விடுப்பு சான்று — அசல் |
| ம.சா.ஆ.3 | 05.01.2023 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை — நகல் |
| ம.சா.ஆ.4 | —— | மனுதாரர் பெயரிலுள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீட செய்யப்படுகிறது. ) — நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | 24.12.2022 | விபத்து பதிவேடு – நகல் |
| ம.சா.ஆ.6 | 24.12.2022 – 27.12.2022 | மெடிக்கல் லீகல் ஒப்பீனியன் – நகல் |
| ம.சா.ஆ.7 | –– | சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட் – அசல் |
| ம.சா.ஆ.8 | –– | மருத்துவ பில் –1 ரூ.500/– அசல் |

3. <u>**நீதிமன்ற சான்றாவணம்**</u>:–

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 02.02.2026 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

4. <u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.1 | அருள் | அரசு பேருந்து ஓட்டுநர் |

5. <u>**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**</u> :–

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 05.01.2023 | இருசக்கர வாகன பதிவு எண்.TN 50 AT 7219 வாகனத்திற்குண்டான மோட்டார் வாகன ஆய்வறிக்கை – நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.2 | 24.12.2022 | மனுதாரருக்கு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு– கணினி நகல் |

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.27 19:06:37 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.